கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com

24.04.2022

ஞானம் 5 – ஒலி 17




# காலத்தோடு நடந்தால் தொட்டதெல்லாம் வெற்றிதான்



# வீணாக்காத வினாடிகளில்தான் வாழ்க்கை





அருட்பணி.சைமன் பீட்டர்

இயேசு கிறிஸ்துவில் பிரியமான ஞான ஒலி வாசக நண்பர்களே உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது வாழ்க்கை உயிருடனும், உயிர்ப்புடனும் இருப்பது வினாடியில்தான். நிகழ்காலத்தில் நாம் கடக்கும் ஒவ்வொரு நிமிடமும்தான் நிஜமானது. அந்த ஒவ்வொரு நிமிடத்திலும் நாம் விழிப்புடன் வாழும் வாழ்க்கையைத்தான் ஜென் தத்துவம் உண்மை என்று கூறுகின்றது

ஜென் என்ற சீன வார்த்தைக்கு அர்த்தம் –சிந்தனை செய்– என்பதாகும். சிந்திக்கிற செயல்தான் ஒருவர் உயிருடன் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகின்றது என்று டெக்கார்ட் என்ற ஜெர்மானிய தத்துவ மேதை கூறினார். அதைத்தான் ஜென் தத்துவமும் கூறுகின்றது. நிகழ்காலத்திலேயே இருக்க, பயணிக்க முயல்வதில்தான் உண்மையான வாழ்க்கை அடங்கி இருக்கின்றது.

கடந்த கால நிகழ்வுகளையே சிந்தித்துக் கொண்டிருக்கின்ற ஒருவர் கடந்த காலத்தைப் போலவே இறந்தவராகின்றார். கடந்தகாலக் காயங்களையும், கசப்பான அனுபவங்களையும், அல்லது மகிழ்ச்சியான நிகழ்வுகளையும் அசைபோட்டுக் கொண்டிருப்பவர், தன் மனதையும் உடல் ஆரோக்கியத்தையும் பழுதடையச் செய்கின்றார். அவர் உயிருடன் இருந்தாலும் அவர் இறந்தநிலையில்தான் இருக்கின்றார். அவர் வாழ்வதில்லை.

மேலும், எதிர்கால எதிர்நோக்கிலும் கற்பனையிலும் வாழ்கின்றவர் இன்னும் அவர் பிறக்காதவர் போலவே இருக்கின்றார். அப்படிப்பட்ட சிந்தனைகள் அவருக்குள் பயத்தையும், படபடப்பையும், மன அழுத்தங்களையும் அவருக்குள் வளர்க்கின்றது அதனால் அவரின் செயல்திறன்களையும் பலவீனப்படுத்துகின்றது. அந்தக சிந்தனைகள் அவரை நிகழ்காலத்தில் வாழவிடுவதில்லை. அவரின் எதிர்காலத்தைப் பற்றிய பயங்கள், சந்தேகங்கள், அவநம்பிக்கைகள் அவரை முடமாக்குவதோடு அவரை சமாதியிலும் புதைக்கின்றது. அவர்கள் இருவரும் நிகழ்காலத்தில் வாழாது, தனக்கும், பிறருக்கும் பயனற்றவராய் இருக்கின்றார்கள்.

இருக்கின்றார். ஆனால் இல்லை என்ற வேதாந்தத்துக்கு உதாரணமாகின்றார்கள். தங்களின் சிந்தனையாலேயே சிறையில் சிக்கிய பறவையாக எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கின்றோம் என்ற நிஜமே தெரிவதில்லை. ஆதலால்தான் இயேசு கடந்தகாலம் கடந்து நிகழ்காலத்தில் வாழவேண்டும் என்று

கவலைப்படுவதால் உங்களுள் எவர் தமது
உயரத்தோடு ஒரு முழம் கூட்ட முடியும்
– லூக்கா 12/25

அதேபோல எதிர்காலத்தைப் பற்றிய கவலையை விட்டொழியுங்கள் என்று விளக்குவதற்காக

எதை உண்பது, எதைக் குடிப்பது என நீங்கள்
தேடிக்கொண்டிருக்க வேண்டாம். கவலை
கொண்டிருக்கவும் வேண்டாம் – லூக்கா 12/29

என்று இயேசு இவ்வாறு கூறுகின்றார்.

வாழ்க்கை ஒவ்வொரு நொடியையும் எவ்வாறு உணர்ந்து பயன்படுத்துகிறோம் என்பதில்தான் அடங்கியுள்ளது. காலத்தைப்போல அனைத்து உயிரினங்களும் ஒவ்வொரு வினாடியிலும் வளர்கின்றது. நமது உடலும் , வயதும் அவ்வாறே இயங்குகின்றது. ஆனால் நமது சிந்தனைதான் நம்மை வாழவும் வைக்கும், முடமாக்கியும் விடும். விழிப்போடு ஒவ்வொரு வினாடியையும் ஆக்கப்பூர்வமாக்குவோம். வாழ்வோம்.



# விவிலியம் அறிவோம் – 34

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF

## ஈசாக்கும் அபிமெலக்கும்

தொடக்கநூல் 28வது பிரிவு யாக்கோபின் கனவைக் குறிப்பிடுகிறது. இந்தப் பிரிவில் நாம் வாசிக்கும் நிகழ்வுகளின் வரலாற்றுச் சூழ்நிலையை ஆராய்வதுமுக்கியம். யாக்கோபுதன் சகோதரனான ஏசாவை இரண்டு தடவைகள் ஏமாற்றியதால் ஏசா யாக்கோபைக் கொல்ல வழிதேடிக்கொண்டிருந்தான். இதை அறிந்த அவனதுதாய் ரெபேக்கா யாக்கோபை காப்பாற்ற எண்ணுகிறார். அவனைக்காரானில் வசிக்கும் தனது சகோதரனான லாபானின் வீட்டிற்கு அனுப்பிவைக்கத் திட்டமிடுகின்றார். எனவே யாக்கோபிடம், இதோ! உன் சகோதரன் ஏசா உன்னைக் கொலை செய்து, தன்னைத் தேற்றிக்கொள்ள விரும்புகிறான். ஆகையால், மகனே நான் சொல்வதைக் கேள். உடனே கிளம்பி காரானில் உள்ள என் சகோதரன் லாபானிடம் ஓடிப்போய், உன் சகோதரன் சீற்றம் தணியும்வரை சில நாள் அவரிடம் தங்கி இரு. தனக்கு விரோதமாய் நீ செய்ததை அவன் மறந்து கோபம் தீர்ந்த பின் நான் உனக்குச் சொல்லியனுப்பி, உன்னை அங்கிருந்து இவ்விடத்திற்கு அழைத்துக் கொள்வேன் என்கிறார். இத்துடன் யாக்கோபை தனது மாமனார் வசிக்கும் இடத்திற்கு அனுப்ப இன்னுமொரு காரணமும் இருந்தது. ஈசாக்கும் ரெபேக்காவும் யாக்கோபு கனானேயப் பெண் எவரையும் திருமணம் செய்வதை விரும்பவில்லை. ஏனெனில் அவனது சகோதரனான ஏசா இத்தியப் பெண்கள் இருவரை மணம் செய்திருந்தான். அவர்களால் ஈசாக்கும் ரெபேக்காவும் பலவிதமான தொல்லைகளுக்கு ஆளாகியிருந்தனர். அவர்களின் வாழ்வில் அமைதியில்லை. எனவே யாக்கோபு லாபானின் பெண்களில் ஒருவரை மணம் செய்வதை அவர்கள் விரும்பினர். இச்செய்தியை யாக்கோபிடம் தெரிவிப்பதற்கு ரெபேக்கா ஈசாக்கின் உதவியை நாடுகிறார்.

ரெபேக்கா ஈசாக்கை நோக்கி, இத்தியப் பெண்களை முன்னிட்டு என் வாழ்க்கை எனக்குச் சலித்துப் போயிற்று. யாக்கோபும் இவர்களைப் போன்று இந்நாட்டுப் பெண்களினின்று ஒருத்தியை மணந்து கொண்டால் என் வாழ்க்கை என்ன ஆவது? எனக் கூறுகின்றாள். இந்தக் காரணத்தால் யாக்கோபின் பெற்றோர் யாக்கோபு கனானேயப் பெண்களில் ஒருத்தியை மணம் செய்வதை விரும்பவில்லை. எனவே ஈசாக்கு யாக்கோபை அழைத்து அவனுக்கு ஆசி வழங்கிக் கூறுகிறார் நீ கனானேயப் புதல்வியருள் எவளையும் மணந்து கொள்ளாதே. புறப்பட்டு, பதான் அராமுக்குப் போய், உன் தாயின் தந்தையாகிய பெத்துவேல் வீட்டிற்குச் செல். அங்கு உன் தாய்மாமன் லாபான் புதல்வியருள் ஒருத்தியை மணந்துகொள் எனக் கட்டளையிடுகின்றார். யாக்கோபும் தனது பெற்றோரின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்து பதான் அராமுக்குச் செல்ல சம்மதிக்கின்றார். பொதுவாக நாடோடி மக்களாக வாழ்ந்து வந்த மக்களினங்கள் தங்கள் இனத்திலிருந்தே பெண் எடுப்பதும் கொடுப்பதும் வழக்கமாக இருந்தது. இப்பழக்கம் கனானேய கலாச்சாரத்தோடு தொடர்புடையது. ஆபிரகாமின் குடும்பத்தினரும் இந்தப் பழக்கத்தைக் கடைபிடிப்பதை நாம் பார்க்கிறோம். ஆபிரகாமும் அவரது மகன் ஈசாக்கு தனது உறவினர் நடுவிலிருந்து ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதையே விரும்பினார். ரெபேக்கா ஈசாக்கின் தாய்மாமனான பெத்துவேலின் மகள். இப்போது யாக்கோபின் பெற்றோரும் யாக்கோபு தனது தாய்மாமனான லாபானின் மகள்




ஒருத்தியைத் திருமணம் செய்வதையே விரும்புகின்றனர். ஈசாக்கு யாக்கோபுக்கு ஆசிவழங்கி அனுப்பிவைக்கிறார். யாக்கோபும் தந்தையின் ஆசியைப் பெற்றபின் பதான் ஆராமுக்குப் புறப்பட்டுச் செல்கிறார்.

யாக்கோபு பதான் அராமுக்குச் செல்லுகின்ற வழியில் இரவைக் கழிப்பதற்காக ஓரிடத்தில் தங்குகிறார். தூங்குவதற்கு வசதியாக இருக்க வேண்டும் என்பதற்காக அவ்விடத்தில் கிடந்தகற்களில் ஒன்றை எடுத்துத் தலைக்குவைத்துக் கொண்டு, அங்கேயே படுத்துறங்குகிறார். தூக்கத்தில் யாக்கோபு ஒரு கனவு காண்கிறார். கனவு காண்பது மனிதர்களின் கட்டுப்பாட்டில் இல்லை; நமது முயற்சியால் நாம் கனவு காண முடியாது. கனவின் வழியாக நமக்குப் பல நல்ல சிந்தனைகள் கிடைக்கின்றன. பண்டைய காலத்தில் கனவு கடவுளின் வெளிப்பாடாகக் கருதப்பட்டது. விவிலியத்தில் கனவு கடவுள் மனிதரோடு தொடர்பு கொண்டு, செய்திகளைக் கூறுவதற்கு பயன்படுத்துகின்ற ஒரு கருவியாகப் பார்க்கப்படுகிறது. யாக்கோபு காணும் கனவில் நிலத்தில் ஊன்றியிருந்த ஓர் ஏணியின் நுனிமேலே வானத்தை தொட்டுக் கொண்டிருந்தது எனப் பார்க்கிறோம். எபிரேய மொழியில் ஏணி என்ற சொல் "Sullam" என்ற சொல்லால்; குறிப்பிடப்படுகிறது. இச்சொல் "Salal" என்ற சொல்லிலிருந்து வருகிறது. இதன் பொருள் நிலத்தை உருட்டிக் கட்டுதல் ஆகும். இது வானமும் பூமியும் மிகவும் நெருக்கமாக உள்ளதைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. பண்டைய சில கலாச்சாரங்களில் பூமியில் உள்ள சில இடங்கள் வானமும் பூமியும் இணைகின்ற இடங்களாகக் கருதப்பட்டன. அதாவது அத்தகைய இடங்களில் வானத்திற்கும் பூமிக்கும் குறைந்த இடைவெளியே இருப்பதாகக் கருதினர். யாக்கோபு கனவு கண்ட இடம் அத்தகைய ஒரு இடமாக இருக்கலாம் என பல அறிஞர்களும் கருதுகின்றனர்.


ஒரு சில அறிஞர்கள் யாக்கோபின் கனவில் காணப்படுகின்ற ஏணி மெசப்பெட்டோமியக் கலாச்சாரத்தில் மிகவும் புகழ்ந்து பேசப்படுகின்ற ஸிக்குராத் (ziggurats) என்ற கோபுரங்களை நினைவூட்டுவதாக கருதுகின்றனர். யாக்கோபு பதான் அராமுக்குச் செல்கிறார்; பதான் அராம் மெசப்பெட் டோமியாவில் உள்ளது. எனவே இக்கனவு யாக்கோபு எதிர்மறையாக இக்காலாச்சாரத்தை குறை கூறுவதைக் குறிக்கிறது எனக் கருதுகின்றனர். யாக்கோபின் கனவில் வானத்தைத் தொட்டுக் கொண்டிருந்த ஏணியின் வழியாக கடவுளின் தூதர் ஏறுவதும் இறங்குவதுமாக இருப்பதைக் காண்கின்றார். யூதரபிக்கள் இச்சொற்றொடரை விளக்குகையில் ஏணியின் மீது ஏறி இறங்கும் வானதூதர்கள் யாக்கோபைப் பாதுகாக்கும் பொருட்டு கடவுளால் அனுப்பப்பட்ட வானதூதர்கள் என்கின்றனர். ஆபிரகாம் தனது வேலைக்காரரை ஈசாக்கிற்கு பெண் பார்ப்பதற்காக அனுப்பிய போது ஆண்டவர் தன் தூதரை உன்னோடு அனுப்பி வைப்பார் என்கிறார் (காண் தொநூ 24:7, 40). அதைப்போல யாக்கோபைக் காப்பதற்கு கடவுள் தன் தூதர்களை அனுப்பி வைப்பதாகக் கருதவும் இடமிருக்கிறது. விவிலியத்தில் பல இடங்களில், வானதூதர்கள் கடவுள் மனிதர்களோடு தொடர்பு கொள்வதற்கு, அவருடைய செய்தியைக் கூறுவதற்குக் கருவிகளாகச் செயல்படுவதைப் பார்க்கிறோம்



(தொநூ 16:7-11; 19:1, 15; 21:17; 22:11, 15; 31:11-13; 32:1).. இங்கேயும் கடவுள் யாக்கோபுடன்

தொடர்பு கொள்கிறார் ஆனால் வானதூதர்கள் வழியாக அவரிடம் பேசவில்லை. கடவுளே நேரடியாக யாக்கோபுடன் பேசுகின்றார். கடவுள் தன்னை ஆண்டவர் என யாக்கோபுக்கு அறிமுகப்படுத்துகின்றார். உன் மூதாதையராகிய ஆபிரகாம், ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே என அறிமுகப்படுத்திய ஆண்டவர் யாக்கோபு படுத்திருக்கும் நிலத்தையும் வழிமரபினரையும் தருவதாக வாக்குறுதி கொடுக்கின்றார்.

யாக்கோபு பதான் அராமுக்குப் புறப்படுகையில் அவரது தந்தையான ஈசாக்கு இதே வாக்குறுதிகளை ஆசியாக அளித்தார். எல்லாம் வல்ல இறைவன் உனக்கு ஆசி வழங்கி, நீ பல இனங்களுக்குத் தந்தையாகும்படி உன்னைப் பலுகிப் பெருகச் செய்வாராக!ஆபிரகாம் பெற்ற ஆசியை அவர் உனக்கும் உன் வழிமரபினருக்கும் வழங்குவாராக! அதனால் நீ அன்னியனாய் வாழும் நாட்டை, அதாவது கடவுள் ஆபிரகாமுக்குத் தந்தநாட்டை, உரிமையாக்கிக் கொள்வாய் எனக் கூறியிருந்தார். இப்போது அதே வாக்குறுதிகளை யாக்கோபு நேரடியாக ஆண்டவரிடமிருந்து பெறுகின்றார். ஆண்டவர் அளிக்கும் வாக்குறுதியில் நிலம், வழிமரபு, நாடு மற்றும் கடவுளின் ஆசி ஆகியவை அவருக்கு உறுதி செய்யப்படுகின்றன. கனவில் ஆண்டவர் யாக்கோபுடன் பேசியதால் தான் கடவுளைக் கண்டதாக யாக்கோபு எண்ணுகின்றார். பலஅறிஞர்களின் கருத்துப்படி யாக்கோபு படுத்திருந்த இடம் ஒரு வழிபாட்டுத்தலமாக இருக்கலாம்; அவர் தலைக்கு வைத்துக் கொண்டு படுப்பதற்குப் பயன்படுத்தியகல் கனானேயக் கடவுள் ஒருவரை அடையாளப் படுத்துகின்ற கல்லாக இருக்கலாம். அந்த



இடம் கனானேய மக்களின் வழிபாட்டுத் தலமாக இருந்தாலும் அவ்விடத்தில் யாக்கோபுடன் பேசிய கடவுள் தன்னை ஆண்டவர் என்றுதான் அறிமுகப் படுத்துகின்றார். மேலும் யாக்கோபின் மூதாதையர்களான ஆபிரகாம், ஈசாக்கு ஆகியோரின் கடவுள் என்றும் கூறுகின்றார்.

கனவு முடிந்ததும் யாக்கோபு தூக்கம் கலைந்து எழுந்து இந்த இடம் எவ்வளவு



அச்சத்திற்குரியது! இதுவே இறைவனின் இல்லம், விண்ணுலகின் வாயில் என்கின்றார். யாக்கோபு தான் கனவு கண்ட இடம் தெய்வீகத்தன்மை வாய்ந்தததாகக் கருதுகிறார். எனவே அந்த நகருக்கு பெத்தேல் என்று பெயரிட்டார் (தொநூ 28:19) என வாசிக்கிறோம். பெத்-எல் என்பது கனானேயர்கள் பெத்-இலி என்ற பெயரில் வழிபட்டு வந்த தெய்வத்தின் பெயராகும். கி.மு ஐந்தாம் நூற்றாண்டு வரை எபிரேய குலத்தவரும் இந்த தெய்வத்தை வழிபட்டு வந்ததற்கான குறிப்புகள் உள்ளன. விவிலியத்தின் தொகுப்பாசியர்கள் பலவேறு பட்ட கலாச்சாரங்களின் பழக்க வழக்கங்களை பயன்படுத்துவது இஸ்ரயேல் பல கலாச் சாரங்களின் கூட்டமைப்பு என்பதை உறுதிப் படுத்துகிறது. கனவு முடிந்ததும் யாக்கோபு செய்யும் இரண்டு காரியங்கள் கனானேய கலாச்சாரத்தில் உள்ளவை. முதலாவது தலைக்கு வைத்திருந்த கல்லை எடுத்து நினைவுத்தூணாக அதை நாட்டுகிறார். இரண்டாவது அதன் மேல் எண்ணெய் வார்க்கிறார் (தொநூ 28:18). இவை இரண்டுமே கனானேய பழக்கங்கள். இத்தகைய நடுகற்கள் கனானேய வழிபாட்டுத் தலங்களில் வைக்கப்பட்டிருந்தன. அவை வளமை மற்றும் கருவுறுதல் ஆகியவற்றின் அடையாளங்களாக


இருந்தன. ஆபிரகாம் இந்த இடத்தில் ஒருபலிபீடம் அமைத்ததாக பிரிவு 12:8 இல் வாசிக்கிறோம். யாக்கோபு பலிபீடம் எதுவும் ஆண்டவருக்கு எழுப்பவில்லை; மாறாக தன் தலைக்கு வைத்துப் படுத்தகல்லை எண்ணெய் வார்த்து அர்ச்சிக்கின்றார். கடவுளை அங்கே சந்தித்ததற்குச் சாட்சியாக அந்தக் கல்லை ஒரு நினைவுத் தூணாக நட்டு வைக்கின்றார்.

பெத்தேல் நகரம் ஆபிரகாமுடனும் (தொநூ 12:8; 13:3-4) மற்றும் யாக்கோபுடனும் தொடர்புபடுத்தி அதிகமாகப் பேசப்படுகிறது. கானான் நாடு வெற்றி கொள்ளப்பட்டு; இஸ்ரயேலின் குலங்கள் மத்தியில் பிரிக்கப்பட்டபோது பெத்தேல் பென்யமின் குலத்திற்கு கொடுக்கப்பட்டது. ஆனால் எப்பிராயீம் குலத்தவர் அதை சூழ்ச்சியால் தங்கள் வசம் ஆக்கிக் கொண்டனர் (நீத 1:22-26).பென்யமீன் குலத்தினரோடு ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் போது இஸ்ரயேலின் ஏனைய குலத்தவர் கடவுளோடு பேச உடன்படிக்கைப் பேழையை அங்கு கொண்டு சென்றனர் (ஒப்பிடுக 1 சாமு 10:3). நீதித்தலைவரான சாமுவேல் நீதி வழங்கிய நகரங்களுள் இதுவும் ஒன்று (1 சாமு 7:16). எரோபாவாம் அரசனால் பொற்கன்றுகளை வழிபட எழுப்பபட்ட இரண்டு வழிபாட்டுத் தலங்களுள் இதுவும் ஒன்று (1 அரசர் 12-13). ஏகூ அரசன் காலத்திலும் இரண்டாம் எரோபவாம் காலத்திலும் பெத்தேல் சிறப்பு பெற்று விளங்கியது (2 அரசர் 10:29). இறைவாக்கினர் ஆமோஸ் காலத்தில் பெத்தேல் அரசரின் வழிபாட்டுத் தலம் அல்லது அரசின் இல்லம் என்றழைக்கப்பட்டது (ஆமோஸ் 7:13; 3:14,15). அரசன் யோசியா யூதாவின் அரசனாக ஆட்சி செய்தகாலத்தில் செய்த சீர்திருத்தங்களின் பயனாகபெத்தேலில் இருந்த வழிபாட்டுத்தலம் அழிக்கப்பட்டது (2 அரசர் 23:15).

யாக்கோபுதான் கனவுகண்ட இடமான பெத்தேலைவிட்டு பதான் அராம் செல்லு முன் தன்னைச் சந்தித்துவாக்குறுதிகள் அளித்த கடவுளுக்குதானும் ஒருவாக்குறுதி அளிக்கின்றார். கடவுள் என்னோடிருந்து நான் போகிற இந்த வழியில் எனக்குப் பாதுகாப்பளித்து உண்ண உணவும், உடுக்க உடையும் தந்து, என் தந்தையின் வீட்டிற்குநான் நலமுடன் திரும்பச் செய்வாராயின், ஆண்டவரே எனக்குக் கடவுளாக இருப்பார். மேலும், நான் நினைவுத் தூணாக நாட்டிய இந்தக் கல்லே கடவுளின் இல்லம் ஆகும். மேலும், நீர் எனக்குத் தரும் யாவற்றிலும் பத்தில் ஒரு பங்கு உமக்குச் செலுத்துவேன் என நேர்ச்சை செய்கின்றார். ஆண்டவர்தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றினாரா? யாக்கோபு தான் கொடுத்த வாக்குறுதிகளுக்கு உண்மையுள்ளவராக இருந்தாரா? என்பதை யாக்கோபின் வாழ்வில் பின்வரும் நிகழ்வுகள் பதில் தரும். யாக்கோபின் கனவு நம் வாழ்வுக்கும் செய்திகளைத் தருகின்றன. இந்த நிகழ்வில் கனவின் வழியாக கடவுள் யாக்கோபுடன் பேசுகின்றார்; வாக்குறுதிகளைப் புதுப்பிக்கின்றார். கடவுள் ஒருவரோடு தொடர்பு கொள்ள விரும்புகின்ற போது கனவும் ஒரு கருவியாகலாம். இன்னும் யாக்கோபின் கனவுவானமும் பூமியும் வெகு தொலைவில் இல்லை; கடவுள் மனிதர்களுக்கு அருகிலேயே உள்ளார் என்ற உண்மைகளையும் கூறுகிறது. கடவுள் நம் அருகில்தான் உள்ளார். நம்மோடு தொடர்பு கொண்டு பேசுவதை அவர் விரும்புகின்றார். நாம் திறந்த இதயம் கொண்டவர்களாககடவுளின் குரலுக்குச் செவிசாய்க்க வேண்டும். அவரது திருவுளத்தை அறிந்தவர்களாக, செயல்படும் போது நமதுவாழ்வு ஆசிர்பெற்ற வாழ்க்கையாக இருக்கும்.

பயணம் தொடரும்,

அருட்பணி. **ஆ. அலெக்ஸ்** CMF





# மறையுரை

அருட்பணி. ஜஸ்டின் சேவியர் ராஜ்
பங்குத்தந்தை,
உடுமலைப்பேட்டை, கோவை மறைமாவட்டம்.

## பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு

24-04-2022

**திப 5 : 12-16, தி.வெ. 1 : 9-13 / யோவா. 20 : 19 - 31**

## ஐயம் தவிர்த்து... நம்பிக்கை கொள்ள...

இறையேசுவின் அன்பிற்குரியவர்களே தாய் திருச்சபை இணைந்து பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிற்றுக் கிழமையை சிறப்பிக்கின்றோம். தாய் திருச்சபை பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையை இரக்கத்தின் ஞாயிறு என்று கொண்டாடுகிறது. இறைவன் நீதியானவர். அதே வேளையில் இரக்கமுடையவர் குற்றம் செய்தவர்களை தண்டிப்பதில் தன் திறமை வெளிப்படுகின்றது. என்று நினைக்காமல் இரக்கம் காட்டுவதில்தான் தான் கடவுள் கடவுள் என்பதை வெளிப்படுத்துகின்றார்.

இன்றைய முதல் வாசகம் திருத்தூதர் பணியில் இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இதில் இறைவன் எவ்வாறு தன் இரக்கத்தை வெளிப்படுத்துகிறார் என்பதை தெளிவாகப் பார்க்கிறோம். இயேசுகிறிஸ்து தன் பணி வாழ்வில் ஈடுபட்டிருந்தபோது மக்கள் கூட்டங்கூட்டமாக அவரை பின் தொடர்ந்தனர். மக்கள் தாங்கள் குணம் பெறவும் அவரது வார்த்தைககை் கேட்கவும், அவரை எந்நேரமும் சூழ்ந்து இருந்தனர். இயேசு கிறிஸ்து உயிர்த்தபின் அவரது பணியைத் திருத்தூதர் மேற்கொண்டனர். இயேசுவின் வல்லமை அவர்களுக்கும் தரப்பட்டது. ஆகவே இயேசு தன் மீட்புப் பணியின்போது மக்களைக் குணமாக்கிய காட்சிகள் மீண்டும் நிகழ்ந்தன. மக்கள் கூட்டங்களும் திருத்தூதர்களைப் பின்பற்றின.

இயேசு ஆற்றிய அற்புதங்களாக இருக்கட்டும், திருத்தூதர்கள் புரிந்த புதுமைகளாக இருக்கட்டும். அவர்கள் தங்கள் சுயநலத்திற்காகவோ, தங்கள் பெயரும் புகழும் பரவ வேண்டும் என்ற நோக்கத்திற்காகவோ செய்யவில்லை. மாறாக பாமர மக்களின் நல்வாழ்விற்காக செய்தார்கள். மனிதர் முழுமையான உடல் நலத்துடன் வாழ வேண்டும என்றே இயேசு கிறிஸ்து விரும்பினார். ஆகவே தான் அவர் பணி வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட எசாயா இறைவாக்கினரின் வார்த்தைகள் இன்று நம் செவிகளில் எடுத்துரைத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

**ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது; ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைபட்டோர் விடுதலை அடைவர் பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார். (லூக். 4:18 19)**

தமிழக திருச்சபையிலே பார்வையற்றோர் என்பது சாதி வெறி கொண்டோர், தலைமை வெறி கொண்டோர், அதிகார வெறி கொண்டோர், பழிவாங்கத் துடிக்கும் கயமைத்தனம் சட்டப்பூர்வமாக குழிபறித்தல் இன்னும் பலர் பார்வை பெற நமக்கு விருப்பமில்லை காரணம் பார்வை பெற்று விட்டால் பிழைக்க முடியாது. மாற வேண்டியிருக்கும்; மாற்ற வேண்டியிருக்கும்.

இன்றைய நற்செய்தியில் புனித தோமா நமக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைக்கிறார். மற்றவர்கள் கூற்றை மட்டும் நம்பி பிழைக்க விரும்பாதவர் புனித தோமா, நேரடி அனுபவம் பெற விரும்புகிறார். அதன் அடிப்படையில் தன் நிலைப்பாட்டை எடுக்க விரும்புகிறார். நம்மிடம் உள்ளது சுயசிந்தனையா அல்லது கடன் வாங்கப்பட்ட சிந்தனையா? நம்முடைய நிலைப்பாட்டை தீர்ப்பானிப்பது எது? சிந்திப்போம்.... செயல்படுவோம். ஆமென்.



# பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு

தி.ப..5:12-16, தி.வெ. 1:9-13, 17-19, யோவா. 20:19-31

**24-04-2022**




பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொண்டு இறை இரக்கத்தை வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே உங்கள் அனைவரையும் பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

ஆண்டவர் மீது ஆழமான நம்பிக்கை வைப்போர் புதிய ஆற்றல் பெறுவர் என்பதை உணர்த்தி, உயிர்ப்பு வாழ்வுக்கு உறுதியான சான்றுகளாக வாழ இன்றைய வழிபாடு நம்மை அழைக்கிறது.

ஆதாமில் ஊதி உயிர் அளித்த இறைவன், உலர்ந்த எலும்புகளுக்கு உயிர் அளித்து புதுவாழ்வளித்த இறைவன் இன்று தூய ஆவியாரை வழங்கி புதுவாழ்வு அளிக்கிறார்.

முதலில் ஐயப்பட்டு, பிறகு அது நீக்கப் பட்டு தெளிவடைந்த, நம்பிக்கை நாதரான தூய தோமா இயேசுவின் காயங்களை தொடுகிறார். இந்தத் தொடுதல் நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள் என்ற ஆழமான மறை உண்மைகளை மலர வைக்கிறது. இதுவே இன்று நம் விசுவாச அறிக்கையாக மணம் வீசுகிறது. ஆண்டவரின் உயிர்ப்புக்கு தோமாவின் இந்த விசுவாச அறிக்கைதான் வலுவான சான்றாக உள்ளது.

கண்களால் கண்டு, கைகளால் தொட்டு உணர்ந்து ஏற்று வாழும் வாழ்வைவிட கண்களால் காணாத, காண முடியாத நிலையில் ஆழமான அப்பழுக்கற்ற விசுவாசத்தோடு வாழும் வாழ்வே பேறு பெற்றது என்ற பேருண்மையை கற்பிக்கிறது இன்றைய வழிபாடு.

இயேசுவைச் சந்தித்த பலரும் தங்கள் வாழ்க்கையில் பெரியதோர் மாற்றத்தை அடைந்தது போல, நாமும் அவர் தரும் திருவிருந்தின் வழியாக, அடுத்தவரை அன்பு செய்வதன் வழியாக அவரை சந்தித்து, அவர் பெயரில் நம்பிக்கை கொண்டு அவரின் பேரிரக்கத்தைப் பெற்று அவரின் சாட்சிகளாகவும், உயிர்ப்பின் மக்களாகவும் வாழ வரம் வேண்டி இன்றைய திருப்பலியில் பங்கேற்போம்.

## முதல் வாசக முன்னுரை

இயேசு கிறிஸ்து உயிர்த்தபின் அவரது வல்லமையைப் பெற்ற திருத்தூதர்கள் அவர் விட்டுச் சென்ற பணியை மேற்கொள் கின்றனர். இயேசுவின் தெய்வீக சக்தி அவர்கள் மூலம் வெளிப்படுத்தப்படுவதை பதிவு செய்கிறார் லூக்கா. சாவை வென்று உயிர்த்த இயேசு என்றும் நம்மோடு இருக்கிறார். எதற்கும் பயப்பட வேண்டாம் என்று விசுவாசத்தை உறுதிப்படுத்தும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இயேசுவின் சீடரும், நான்காவது நற்செய்தியை தொகுத்தவருமான திருத்தூதர் யோவானை திருவெளிபாடு ஆகமத்தை எழுத ஆண்டவர் இயேசு தூண்டிய அழைப்புக் காட்சியை விவரிக்கிறது இன்றைய இரண்டாம் வாசகம். துன்புறுவோருக்கு ஆறுதல் கூறி ஊக்கமளிக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) முதலும் முடிவுமாய் இருப்பவரும் என்றென்றும் வாழ்பவருமான அன்பு இறைவா, தந்தை என்னை அனுப்பியது போல் நானும் உங்களை அனுப்புகிறேன் என்ற உம் திருமகன் இயேசுவின் அழைப்பை ஏற்று, தம்மையே முழுமையாய் அர்ப்பணித்த திருத்தந்தை, ஆயர்கள், எம் பங்குத் தந்தையர், குருக்கள், அருட்கன்னியர் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். உமது மீட்பை எடுத்துரைக்கும் கருவிகளாக இருக்கும் இவர்கள், தோமாவைப் போல் துணிவுடன் இறையரசை அறிவிக்க, தேவையான ஆற்றலையும், ஆரோக்கியத்தையும் நிறைவாகத் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமாய் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) நம்பிக்கையின் நாயகனே இறைவா, கண்ணால் கண்டால்தான் நம்புவேன் என்று எண்ணாமல், உயிர்ப்பின் அனுபவம் பெற்றவுடன் நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள் என்று உம்மிடம் சரணடைந்த தோமாவைப்போல் நாங்களும் உம்மிடம் முழுமையாக சரண் அடைந்து, உம் திருவுளத்தை நிறைவேற்றி உறுதியான விசுவாசத்துடன் வாழ அருள் செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) சாவை வென்று சரித்திரம் படைத்த உம் திருமகன் இயேசு வழியாக சமாதானத்தை வழங்குகின்ற அன்பு இறைவா, இயேசு விரும்புவது சமாதானமே, அவர் கொடுக்க விரும்புவது சமாதானத்தையே, அவருக்கு மிகவும் பிரியமானதும் சமாதானமே என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து, எங்கள் வாழ்க்கையில் பொறாமை, பகைமை போன்றவற்றை விலக்கி வாழவும், அதன் மூலம் எங்கள் இல்லங்களிலும், உள்ளங்களிலும் சமாதானம் குடிகொள்ளவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) இறந்த உடலுக்கு உயிர் கொடுக்கும் ஆற்றலும், வரண்ட நிலத்தை வளப்படுத்தும் வல்லமையும் கொண்ட இறைவா, காலம் கடந்த பின்பும் குழந்தையின்றி தவித்த அன்னாள், எலிசபெத் ஆகியோர்மீது மனமிரங்கி அவர்களுக்குத் தாய்மைப் பேறு தந்ததைப் போல், முதிர்ந்த வயதிலும் சாராள் வாழ்வை குழந்தை வரம் தந்து துளிர்க்க வைத்ததைப்போல், குழந்தை பாக்கியமின்றி தவிக்கும் ஒவ்வொரு தம்பதியர் மீதும் இரக்கம் வையும். அவர்கள் குழந்தை பாக்கியம் பெற்று நிறை வாழ்வைப் பெற வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுறோம்.

## திரு.வி.க.வின்
## கிறிஸ்து மொழிக் குறள்



**நீதிக்குத் துன்பில் நெருக்குண்போர் வாழிபரஞ்**
**சோதி அரசவர் சொத்து**



அறத்திற்காகத் துன்பத்தில் நெருக்கப் படுபவர்கள் வாழ்க! அவர்கள் ஒளிபொருந்திய விண்ணக அரசைச் செல்வமாகப் பெறுவார்கள்.

நீதிக்கு – அறத்திற்கு, பரஞ்சோதி – விண்ணக ஒளி



# வத்திக்கான் செய்திகள்

## பூமி அழிவுறுவதை தடுப்பதற்கு உடன்பிறந்த உணர்வில் செயல்படுங்கள்

கடவுள் நமக்கு வழங்கியுள்ள பொதுவான இல்லமாகிய இப்பூமியில் வாழ்கின்ற நாம் எல்லாரும், அதனை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு, உடன்பிறப்புக்களாக, ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வெள்ளியன்று கேட்டுக்கொண்டுள்ளார்.

நம் பொதுவான இல்லமாகிய இப்பூமி அழிக்கப்படுவதை நிறுத்துவதற்கும், இயற்கையைப் பேணிப் பாதுகாப்பதற்கும், அரசுகள், தொழிலதிபர்கள், குடிமக்கள் என எல்லாரும் தங்களின் பங்கை ஆற்றவேண்டும் என்றும், திருத்தந்தை அக்குறுஞ்செய்தியில் பதிவுசெய்துள்ளார்.

### வயதுமுதிர்ந்தோர், அன்புகூரப்பட்டு, மதிக்கப்படவேண்டும்

இரு வருடங்களுக்குப்பின், வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் முதன்முறையாக நடைபெற்ற புதன் மறைக்கல்வியுரையில், வயதுமுதிர்ந்தோரை மதித்தல், வாழ்வு மற்றும், அதன் பலநிலைகளை இளையோருக்குக் கற்றுக்கொடுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை திருத்தந்தை வலியுறுத்திக் கூறினார்

### உங்களின் அச்சங்களைப் பகிர்வதற்கு அஞ்சவேண்டாம்

நாம் எல்லாருமே சிலநேரங்கள் பற்றி அஞ்சுகிறோம், அந்நேரங்களில் நாம் நம்பிக்கை வைத்துள்ளவர்களோடு நம் அச்சங்களைப் பகிர்ந்துகொள்ளவேண்டும் – திருத்தந்தை பிரான்சிஸ்

### துணிவோடிருங்கள், உயிர்ப்பின் மகிழ்வை அறிவியுங்கள்

‘அஞ்சாதீர்கள்‘ என்ற சொல்லை, மரணத்தை வென்ற இயேசுவைத் தவிர, வேறு யாரால், நம்மிடம் நம்பத்தக்கமுறையில் கூறமுடியும் – திருத்தந்தை பிரான்சிஸ்

# இந்து வார விவிலிய வாசகங்கள்



## பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு

### 24.04.2022 – ஞாயிற்றுக்கிழமை

முதல் வாசகம் : திப. 5:12-16
இரண்டாம் வாசகம் : தி.வெ. 1:9-11அ, 12-13, 17-19
நற்செய்தி வாசகம் : யோவா. 20: 19-31

### 25.04.2022 – திங்கள்கிழமை

முதல் வாசகம் : 1பேது. 5:5ஆ-14
நற்செய்தி வாசகம் : மாற். 16: 15-20

### 26.04.2022 – செவ்வாய்கிழமை

முதல் வாசகம் : திப. 4 : 32-37
நற்செய்தி வாசகம் : யோவா. 3: 7-15

### 27.04.2022 – புதன்கிழமை

முதல் வாசகம் : திப. 5:17-26
நற்செய்தி வாசகம் : யோவா. 3: 16-21

### 28.04.2022 – வியாழக்கிழமை

முதல் வாசகம் : திப. 5 : 27-33
நற்செய்தி வாசகம் : யோவா. 3:31-36

### 29.04.2022 – வெள்ளிக்கிழமை


முதல் வாசகம் : திப. 5:34-42
நற்செய்தி வாசகம் : யோவா. 6:1-15

### 30.04.2022 – சனிக்கிழமை

முதல் வாசகம் : திப. 6 : 1-7
நற்செய்தி வாசகம் : யோவா. 6:16-21

**So, if you think you are standing firm, be careful that you don't fall!**

**1 Cori. 10:12**






# திருவிவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட

## தித்திக்கும் திருக்குறள்

**கதம் காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.**

அதிகாரம் 13
அடக்கமுடைமை
குறள் - 130

சினம் தோன்றாமல் காத்துக் கல்வி கற்று, அடக்கம் உடையவனாக இருக்க வல்லவனுடைய செவ்வியை, அவனுடைய வழியில் சென்று அறம் பார்த்திருக்கும்.

செவ்வி என்பதன் பொருள் பண்பு, நேர்மை.

நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக் கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்.

(மத்தேயு நற்செய்தி 6:6)

உள்ளறைக்கு சென்று கதவை அடைத்துக் கொண்டு என்றால் என்ன அர்த்தம் ? நம் ஒவ்வொருவருடைய எண்ணங்களையும், கோபங்களையும், ஐம்புலன்களை பூட்டி மூடிவிடுங்கள் என்று அர்த்தம். மனதின் அறையை சத்தியம் என்னும் கச்சையால் கட்டிவிட வேண்டும். கடவுளை நாம் தேடும் பொழுது எந்த ஒரு இடையூறும், நம் மனதில் எந்த ஒரு சலனமும் தொந்தரவும் இல்லாமல் ஆண்டவருடைய பிரசன்னத்திற்குள் செல்லவேண்டும் . பரிசுத்தஆவியானவர் சொல்வதைக் கேட்பதற்கு நம்முடைய கண்கள் திறந்தும், காதுகள் கவனமாக கேட்பதாகவும் இருக்க வேண்டும்.

சாலமோனைக் குறித்து ஒரு பழங்கால கதை ஒன்று உண்டு. சிறுவனான சாலமோன் தாவீதின் அரண்மனைக்கு முன்பாக விளையாடிக் கொண்டிருந்தார். ஒரு பொற்கொல்லன் சந்தோஷமாய் அரசரைப் பார்க்கப் போகிறான். போய் திரும்பி வரும்போது மிகுந்த கவலையுடன் பொற்கொல்லன் வருவதைப் பார்த்த சாலமோன் அவரிடம், கவலைக்கான காரணத்தை விசாரிக்கிறார். அதற்கு பொற்கொல்லன் அரசருக்கு ஏதாவது நகைகள் செய்ய வேண்டுமா? என்று கேட்கப் போனேன். ஆனால் அவரோ மிகுந்த டென்ஷனில் இருந்தார். கோபத்துடன் என்னை பார்த்து, 'போ.. போய் ஒரு மோதிரம் செய்து கொண்டு வா; நான் அந்த மோதிரத்தை துக்கத்தோடு பார்க்கும்போது என் துக்கம் சந்தோஷமாய் மாற வேண்டும் அப்படி செய்யாவிட்டால் என்ன நடக்கும் என்று எனக்கு தெரியாது' என்று சொல்லி விட்டார் என்றார்

சாலமோன் பொற்கொல்லனிடம் 'கவலைப்படாதே, சாதாரண ஒரு மோதிரம் செய்; அதிலேயே இது நிலைக்காது; கடந்து போய்விடும்'. என்று பொறித்துக்கொண்டு அரசரிடம் கொடுத்து விடும்' என்றார். பொற்கொல்லன் அப்படியே செய்து, ராஜா துக்கத்தோடு இருக்கும்போது கொடுத்தார். அரசர் அதைப் பார்த்தார். 'இது நிலைக்காது; கடந்து போய்விடும்' என்ற வார்த்தைகள் அவருடைய உள்ளத்தை த் தேற்றியது. மகிழ்ச்சியுடன் பொற்கொல்லருக்குச் சிறந்த பரிசுகளைக் கொடுத்தார் அரசர்.

சாந்தப்படுத்தும் சொல், வாழ்வளிக்கும் மரம் போன்றது; வஞ்சகப் பேச்சாலோ மனமுடைந்து போகும்.

(நீதிமொழிகள்15:4)

கப்பல்களைப் பாருங்கள். அவை எத்துணை பெரியனவாக இருந்தாலும்ட, கடுங்காற்றால் அடித்துச் செல்லப்பட்டாலும், கப்பலோட்டுவோர் சிறியதொரு சுக்கானைக் கொண்டு தாம் விரும்பும் திசையை நோக்கி அவற்றைச் செலுத்துகின்றனர்.

மனித நாவும் அதைப்போல ஒரு சிறிய உறுப்புதான். ஆனால் பெரிய காரியங்களைச் சாதிப்பதாக அது பெருமையடிக்கிறது. பாருங்கள், சிறியதொரு தீப்பொறி எத்துணை பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது.

நாவும் தீயைப் போன்றதுதான். நெறிகெட்ட உலகின் உருவே அது. நம்முடைய உறுப்புகளுள் ஒன்றாக அமைந்திருக்கும் இந்த நா நம் உடல் முழுவதையும் கறைப்படுத்துகிறது. அது நம் வாழ்க்கைச் சக்கரம் முழுவதையும் எரித்துவிடுகிறது; எரிப்பதற்கான நெருப்பை நரகத்திலிருந்தே பெறுகிறது.

காட்டில் வாழ்வன, பறப்பன, ஊர்வன, கடலில் வாழ்வன ஆகிய எல்லா உயிரினங்களையும் மனிதர் அடக்கிவிடலாம்; அடக்கியும் உள்ளனர்.

ஆனால் நாவை அடக்க யாராலும் முடிவதில்லை. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அது கொடியது; சாவை விளைவிக்கும் நஞ்சு நிறைந்தது.

தந்தையாம் ஆண்டவரைப் போற்றுவது அந்நாவே; கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதரைத் தூற்றுவதும் அந்நாவே.

போற்றலும் தூற்றலும் ஒரே வாயிலிருந்து வருகின்றன. என் சகோதர சகோதரிகளே, இவ்வாறு இருத்தலாகாது.

என் அன்பர்களே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும் திராட்சைச் செடி அத்திப் பழங்களையும் கொடுக்குமா? அவ்வாறே, உப்பு நீர்ச் சுனையிலிருந்து நன்னீர் கிடைக்காது.

உங்களிடையே ஞானமும் அறிவாற்றலும் உடையவர் யாராவது இருந்தால், ஞானம் தரும் பணிவாலும் நன்னடத்தையாலும் அவற்றைக் காட்டட்டும்.

யாக்கோபு 3:4-14

உங்கள் உள்ளத்தில் பொறாமையும் மனக்கசப்பும் கட்சி மனப்பான்மையும் இருக்குமானால் அதைப்பற்றிப் பெருமை பாராட்ட வேண்டாம். உண்மையை எதிர்த்துப் பொய் பேசவேண்டாம்.

இத்தகைய ஞானம் விண்ணிலிருந்து வருவது அல்ல; மாறாக, மண்ணுலகைச் சார்ந்தது. அது மனித இயல்பு சார்ந்தது;

பேய்த் தன்மை வாய்ந்தது. பொறாமையும் கட்சி மனப்பான்மையும் உள்ள இடத்தில் குழப்பமும் எல்லாக் கொடுஞ் செயல்களும் நடக்கும்.

விண்ணிலிருந்து வரும் ஞானத்தின் தலையாய பண்பு அதன் தூய்மையாகும். மேலும் அது அமைதியை நாடும்; பொறுமை கொள்ளும்; இணங்கிப் போகும் தன்மையுடையது; இரக்கமும் நற்செயல்களும் நிறைந்தது; நடுநிலை தவறாதது; வெளிவேடமற்றது.


அமைதி ஏற்படுத்துவோர் விதைத்த அமைதி என்னும் விதையிலிருந்து நீதியென்னும் கனி விளைகிறது.

(யாக்கோபு 3:4-18)

சினத்தினால் வருவது துன்பம் மட்டுமே.. சினத்தை கட்டுப்படுத்தி அன்பு வழியில் செல்லும்போது எல்லாம் இறைமயமாகும். அறம் நம்மை சூழ்ந்து காக்கும்.

*இயேசுவுக்கே புகழ்*

**–லீமா விக்டோரியா**



# திருவிவிலியத்தோடு திருக்குறளும் படிப்போம்...